<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி</u>

**முன்னிலை:**-திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
கொடுமுடி.

2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் நாள் வியாழக்கிழமை

**<u>பல்வகை மனு எண்.53/2026</u>**
**<u>CNR No.TNED13-000191-2026</u>**
**<u>in</u>**
**<u>C.C.No.160/2025</u>**

கோபாலகிருஷ்ணன், வயது 35, த/பெ.வீ.சுப்பிரமணியம்,
171, அரிஜன காலணி, நகப்பாளையம்,
கொடுமுடி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்.
- மனுதாரர்/வாகனத்தை வைத்திருந்தவர்

//எதிர்//

1. செல்வராஜ்,
த/பெ.பெருமாள்,
69, கொந்தாளம்புதூர்,
ஈரோடு மாவட்டம். - 1ம் எதிர்மனுதாரர்/வாகன உரிமையாளர்

2. காவல் உதவி ஆய்வாளர்,
கொடுமுடி காவல் நிலையம்,
குற்ற எண்.216/2024. - 2ம் எதிர்மனுதாரர்/குற்றம்சாட்டுபவர்

இம்மனு 12.03.2026ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர்/வாகனத்தை வைத்திருந்தவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.கார்த்திகேயன் அவர்களும், 2ம் எதிர்மனுதாரர்/குற்றம்சாட்டுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும் ஆஜராகி, மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்/வாகனத்தை வைத்திருந்தவர் TN 33 BM 3550 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splendor Plus வாகனத்தை இடைக்கால பொறுப்பில் தன்னிடம்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.12 14:28:17 +0530

ஒப்படைக்ககோரி பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 497ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் கோபாலகிருஷ்ணன் சார்பில் வழக்கு சொத்தான TN 33 BM 3550 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splendor Plus வாகனத்தை தன்னிடம் இடைக்கால பொறுப்பில் வழங்குமாறு மனு தாக்கல் செய்து, மேற்படி வாகனத்தின் பதிவுச் சான்று செல்வராஜ் என்பவரின் பெயரில் உள்ளதாகவும், அந்த வாகனத்தை மனுதாரர் தான் பராமரித்து ஓட்டி வருவதாகவும், வாகனத்தின் உரிமையாளரான செல்வராஜ் பெயரில் உள்ள உள்ள R.C. புத்தக நகல் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் நீதிமன்றம் கோரும்போது மேற்படி வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக இருப்பதாகவும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைக்கு கட்டுப்படுவதாகவும், மேற்படி வாகனமானது மனுதாரரின் அன்றாட பயன்பாட்டிற்கு அவசியமானது என்றும் குறிப்பிட்டதன் அடிப்படையில் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்ட ***Sunderbhai Ambalal Desai //VS// State of Gujarat*** என்ற வழக்கின் தீர்ப்பின்படி மேற்படி வாகனமானது காவல்நிலைய பொறுப்பில் இருந்தால் மழை மற்றும் வெயிலால் பாதிக்கப்பட்டு பழுது அடைந்து பயனற்று போய்விடும் என்பதாலும், வாகனத்தின் உரிமையாளர் மனுதாரர் கோபாலகிருஷ்ணன் தான் என்றும், நீதிமன்ற விதிமுறைகளுக்கு உட்பட்டு வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க எவ்வித ஆட்சேபணையும் இல்லை என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேற்படி இருசக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் மனுதாரர் வசம் ஒப்படைத்தால் அரசு தரப்பிற்கு எந்தவித இடையூறும் ஏற்படாது என்பதை கருத்தில் கொண்டும் மேற்படி மனுவானது கீழ்கண்ட நிபந்தனையின் பேரில் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர் ரூ.30,000/-க்கு சொந்த பிணையமும், மேற்சொன்ன தொகைக்கு மேலும் ஒரு நபர் பிணையமும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.12 14:28:22 +0530

2. மனுதாரர், வாகனத்தின் உரிமையாளரான செல்வராஜ் என்பவரிடம் இருந்து TN 33 BM 3550 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splendor Plus வாகனத்தை விலைக்கு வாங்கியதற்கான உறுதிமொழி ஆவணத்தை தாக்கல் செய்ய வேண்டும்.

3. மேற்படி வாகனத்தின் அசல் பதிவு சான்றை (ஆர்.சி புத்தகம்) நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

4. மேலும் மேற்படி வாகனம் மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் இருக்கும்போது வாகனத்தின் நிறத்திலோ, அமைப்பிலோ எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது.

5. மேற்படி வாகனத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ கூடாது.

6. மேற்படி வாகனத்தினை நான்கு திசைகளிலும் புகைப்படம் எடுத்து, மேற்படி புகைப்படத்தின் பின்பக்கம் கையொப்பம் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

7. பாரதிய சாட்சியச் சட்டம் 2023 பிரிவு 63(4)(C) இன் கீழ் இணக்கத்துடன் ஒரு பஞ்சநாமாவை எழுதிக் கொடுக்க வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.12 14:28:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.